**தேயிலை மற்றும் இறப்பர் சிறுநிலவுடமையாளர்களினை பலப்படுத்தல் செயற்திட்டம் - 2020**

தேயிலை மற்றும் இறப்பர் சிறுநிலவுடமையாளர்களினை பலப்படுத்தல் செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 ஏப்ரல் 26 ஆம் திகதிய 2000001447 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IX ஆம் உறுப்புரையின் 9.03(அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம், பெருந்தோட்ட அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அமுலாக்கல் முகவராகவும் உள்ளது. செயற்திட்டப் பகுதியிலுள்ள தேயிலை மற்றும் இறப்பர் சிறுநிலவுடமையாளர்களின் அதிக உற்பத்தி, இலாபத்தன்மை மற்றும் மீட்சியடையும் பொருளாதார நடவடிக்கைகள் என்பவற்றை அபிவிருத்தி செய்தல் செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 8,502.08 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 65.4 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 3,349.28 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 25.77 மில்லியன் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது. ரூபா 5,152.80 மில்லியன் மிகுதிய தொகை இலங்கை அரசாங்கம், வங்கிகள், பயனாளிகள் மற்றும் தனியார் துறை என்பவற்றால் நிதியளிப்புச் செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 ஆகஸ்ட் 15 இல் தொடங்கியிருந்ததுடன் 2021 ஏப்ரல் 23 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கல் திகதி 2022 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. பௌதீக செயலாற்றல்

2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| கூறு | செயற்பாடு | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | தாமதத்திற்கான காரணங்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் அலகுகள் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் அலகுகள் | | | | |
| தேயிலை சிறுநிலவுடமையாளர் அபிவிருத்தி | தேயிலை சிறுநிலவுடமையாளர்களுக்கான சந்தை சார்ந்த உற்பத்தி ஆதரவு | 650 ha. | 205 ha. | 2016 முதல் 2022 ஆம் ஆண்டு வரை 06 தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் 5,500 ஹெக்டெயர் தேயிலை காணிகளை புனரமைத்து மீள்நடுகை செய்வதற்கு இச்செயற்திட்டம் திட்டமிட்டிருந்த போதிலும் செயற்திட்டம் திட்டமிட்டவாறு 2016 ஆம் ஆண்டில் அதன் செயற்பாடுகளை ஆரம்பித்திருக்கவில்லை. எனவே, 2020 திசெம்பர் 31 | தேயிலை மீள்நடுகைக்கான முக்கிய பருவம் சிறுபோகமாக காணப்படுவதால் 2020 மார்ச் 16 முதல் கொவிட் 19 தொற்றுநோய் தொடங்கியவுடன் நாடு பூட்டப்பட்டது. | கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக தொழில்நுட்ப விரிவாக்கல் சேவைகளைப் பெறுவதில் ஏற்பட்ட சிரமங்கள் | திட்டத்தின் செயற்பாடுகள் பட்டியலிட்டவாறு மேற்கொள்ளப்பட வேண்டும். |

இல் உள்ளவாறு 2,102 ஹெக்டெயர் மாத்திரமே புனரமைக்கப்பட்டு மீள்நடுகை செய்யப்பட்டுள்ளது . அதன் பிரகாரம் 4,500 ஹெக்டெயர் வரை தேயிலை காணிகளை புனரமைத்து மீள்நடுகை செய்வதற்கான இலக்கை மீளாய்வு செய்வதற்கு செயற்திட்டம் தீர்மானித்திருந்தது . ஆகையால் ஆண்டொன்றிற்கு குறைந்தபட்சம் 650 ஹெக்டெயர் தேயிலை காணிகள் புனரமைக்கப்பட வேண்டியதுடன் செயற்திட்டம் தொடங்கப்பட்டு 5 ஆண்டுகளுக்குள் மொத்த தேயிலை காணிகளில் 75 சதவீதம் புனரமைக்கப்பட்டு மீள்நடுகை செய்யப்பட

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | வேண்டியிருந்த போதிலும் 46 சதவீதம் மாத்திரமே அடைந்து கொள்ளப்பட்டுள்ளது. | | | |
| இறப்பர் சிறுநிலவுடமையாளர் அபிவிருத்தி | இறப்பருக்கான சந்தை சார்ந்த உற்பத்தி மற்றும் செயன்முறை ஆதரவு | 3,000 ha. | 2,623 ha. | செயற்திட்ட காலப்பகுதியினுள் மொனராகலை மற்றும் அம்பாறை ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் புதிய இறப்பர் பயிர்ச்செய்கை இலக்கு 3,000 ஹெக்டெயர்களாக இருந்ததுடன், 2016 முதல் 2019 வரை 2,094 ஹெக்டெயர் பயிரிடப்பட்டுள்ளது. மிகுதியாகவுள்ள 906 ஹெக்டெயரில் மீளாய்வாண்டின் போது பயிரிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், 529 ஹெக்டெயரில் மாத்திரமே பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டி | 2019 இறுதியில் பெய்த கனமழையால் இறப்பர் பூக்களின் நம்பகத்தன்மை குறைவடைந்தது. | அதிக மழை காரணமாக மற்றும் இறப்பர் நாற்றுக்களில் இருந்து ஒட்டுரக இறப்பர் செடிகளை 2020 இல் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | அனைத்து நடவடிக்கைகளும் உரிய காலத்தில் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ருந்ததால், இறப்பர் தோட்டங்களில் எதிர்பார்த்த இலக்கை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | |

**2.2 குறைப்பயன்பாடுடைய அல்லது பயன்படுத்தப்படாத வளங்கள்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த பெறுகை திட்டத்தின் பிரகாரம்; pH மானிகள், methium sodium போத்தல்கள் மற்றும் நிழல் வலைகள் ஆகியவற்றை கொள்வனவு செய்வதற்காக ரூபா 18.7 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில் தேயிலை பரிசோதகர்களுக்கான pH மானி மற்றும் நாற்றுக்களுக்கான நிழல் வலைகளை கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்ட ரூபா 15.3 மில்லியன் அல்லது 82 வீதமான தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கொவிட் தொற்றுநோய் காரணமாக உரிய நேரத்தில் கொள்வனவுகளை மேற்கொள்வதில் சிரமம் காணப்பட்டதன் காரணமாக அந்த நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் 18 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. | திட்டத்தின் செயற்பாடுகள் காலதாமதமின்றி செயற்திட்ட காலப்பகுதியினுள் பட்டியலிட்டவாறு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அம்பாறை மாவட்டத்தில் பதியத்தலாவ இறப்பர் நாற்றுக்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக இச் செயற்திட்டம் ரூபா 41.9 மில்லியன் தொகையை வழங்கியிருந்தது. அதில் ரூபா 40.8 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டதுடன் மிகுதியாகவுள்ள ரூபா 1.1 மில்லியன் தொகை வங்கி கணக்கில் விளைவற்றிருந்தது. | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அபிவிருத்தி பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தவணைப்பண கொடுப்பனவுகள் ரூபா 41,938,445 ஆகும். | எதிர்பார்க்கப்படும் செயற்பாடு PMU ஆல் துரிதப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட வேண்டும். |
| (இ) | செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 5 வருடங்கள் கடந்துள்ள போதிலும் இணைய அடிப்படையிலான முகாமைத்துவ தகவல் முறைமை ஒன்றை நிறுவுவதற்காக 2020 ஆம் ஆண்டில் ரூபா 4.6 மில்லியன் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், அது நிறுவப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, செயற்திட்டத்தால் தற்போதுள்ள மாவட்ட அலுவலகத்தை ஒருங்கிணைத்து | இச் செயற்திட்டம் ஒரு வலைத்தள செயன்முறைப்படுத்தல் முகாமைத்துவ தகவல் முறைமையை உருவாக்குகிறதுடன் இதுவரை 80 சதவீத பௌதீக முன்னேற்றத்தைப் பதிவு செய்துள்ளது. | முகாமைத்துவ தகவல் முறைமை நிறுவப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தேவையான முகாமைத்துவ தகவல் முறைமையை பேண முடியாதிருந்தது. | | |
| (ஈ) | 2020 ஆம் ஆண்டில் செயற்திட்ட விளைவுகள் தொடர்பான ஆய்வை நடாத்துவதற்கான ஆலோசனைக்காக ரூபா 4.6 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்ட போதிலும் அது அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் முற்பகுதியில் செயற்திட்ட விளைவு ஆய்வுகளின் பெறுகை பணிகள் தொடங்கப்பட்ட போதிலும் அது பூர்த்தியடைந்த பின்னர், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய பட்டப்பின்படிப்பு நிறுவகம் ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் கொவிட்-19 தொற்றுநோயின் இரண்டாவது அலை காரணமாக பயனாளிகளைச் சென்றடைவதில் சிக்கல்கள் காணப்பட்டன. | செயற்திட்ட பெறுபேறுகளை மதிப்பீடு செய்வதற்கு செயற்திட்ட விளைவு ஆய்வுகள் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் சுற்றாடல் மற்றும் சமூக பாதுகாப்பு ஆலோசனை நடவடிக்கைகளுக்காக ரூபா 1.8 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் ஆலோசனையாளர் ஒருவர் இல்லாததன் காரணமாக ரூபா 900,000 அல்லது 50 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது. | பெறுகை குழு 2019 திசெம்பர் 31 இல் ஆலோசனையாளர் ஒருவரை நியமனம் செய்வதை அங்கீகரித்திருந்ததுடன் தொடர்புடைய ஆலோசனையாளர் 2020 பெப்ரவரி 1 முதல் யூலை 31 வரை குறுங்கால ஆலோசனை சேவையை வழங்கியிருந்தார். | ஆலோசனையாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டும். |